| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 15.05.2026 | |
| STC No. 61/2024 | |
| சாட்சி :PW | |
| பெயர் : திரு.மாணிக்கவாசகம் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. வெங்கடாசலம் | தொழில் : கோழிப்பண்ணை |
| கிராமம் : நல்லாம்பிள்ளைபுதூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : /2026 |
| ( , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------------

**சாட்சி மனுவில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பு )</u>**

**1.** எனது வழக்கறிஞர் தயாரித்த ஆவணங்களை நன்றாக படித்து பார்த்த பின்னர் தான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆணையுறுதி ஆவணத்தில் எனது தந்தை பெயர் அழகர் என்று குறிப்பிட்டுள்ளதால் இந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. ஆறுமுகம் என்பவருக்கு பூர்வீகம் எனது ஊர்தான் என்றால் ஆமாம். ஆறுமுகம் என்பவர் பைனான்ஸ், ரியல் எஸ்டேட், காண்ட்ராக்ட் தொழில் செய்து வருகிறாரா என்றால் இல்லை, காண்ட்ராக்ட் தொழில் மட்டும் செய்து வருகிறார். அவரிடம் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் ஒரு வருடம் தான் பணி செய்தேன்.

2. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிரிக்கு நான் நேரடியாக பணம் கொடுத்தாகவும், காசோலை கொடுத்தாகவும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் ITI வரை படித்துள்ளேன். நான் எதிரிக்கு கொடுத்த கடன் தொகையை எதிரியிடம் நேரடியாகவும், போன் மூலமாக கேட்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் இந்த வழக்கின் எதிரியான சுனிதா என்பவர் வேலூர் மாவட்டம், பாகாயம் என்ற காவல்நிலையத்தில் ஆறுமுகம் என்பவர் மீது எனது கணவருக்கும், ஆறுமுகத்திற்கும் சீட்டு கொடுக்கல்,

வாங்குல் இருந்து வந்துள்ளது என்றும் அதில் எனது கணவர் எனது காசோலையான 755706, 755707, 035692, 035713 ஆகிய SBI காசோலைகளை எனது கணவர் ஆறுமுகம் என்பவரிடம் கொடுத்தார் என்றும் அதன்பின்பு ஆறுமுகம் என்பவர் என்னை அசிங்கமாக பேசி, திட்டியும் உனது கணவர் கொடுக்க வேண்டிய பணத்தை நீ கொடு திட்டி, மிரட்டியது சம்மந்தமாக புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3.எனக்கு ஆறுமுகம் என்பவர் இவ்வழக்கின் எதிரியான சுனிதாவை கெட்டவார்த்தையால் திட்டி, அடித்து உனது கணவர் கொடுக்க வேண்டிய பணத்தை நீ கொடு என்று சொன்ன விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூ. 4,60,000/- கொடுத்தேன் என்றால் ஆமாம். பணத்தை திரும்ப பெறுவதற்கு தனிப்பட்ட முயற்சி செய்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் பணம் கொடுக்கவில்லை என்றும், எதிரியிடம் காசோலை பெறவில்லை, கடன் கொடுக்கவில்லை என்றும் எனது ஊரைச்சேர்ந்த ஆறுமுகம் என்பவர் என்னிடம் நிரப்படாத காசோலை, பூர்த்தி செய்யப்படாமல் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் அவர் கேட்டுக்கொண்டதன் பெயரில் இந்த வழக்கை எதிரிக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படியான காசோலை வழக்கு அல்ல என்றால் சரியல்ல. சட்டப்படியான வசூல் செய்யும் உரிமையும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.